30-06-2011

## தலைப்பு : கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும்

**இத்தலைப்பில் சி. சிவசேகரம் அவர்களின் தொடக்கவுரையுடன் நடந்த கலந்துரையாடலில் உரையாடப்பட்ட கருத்துக்கள் வருமாறு,**

மெய்யியல் என்பது மனித இருப்பு, அறிவு, விழுமியங்கள், மனம், நம்பிக்கைகள் பகுத்தறிவு, மொழி என்பன போன்ற பல்வேறு விடயங்களையும் பற்றிய தேடல்களைக் கொண்டது. மெய்யியலின்; அடிப்படையான பிரச்சனை, இருப்பிற்கும் எண்ணத்திற்குமுள்ள உறவையும் ஆன்மிகத்திற்கும் சடப்பொருளுக்கும் உள்ள உறவையும் பற்றியது என்பர்.

கருத்துமுதல்வாதம் எனவும் பொருள்முதல்வாதம் எனவும் மெய்யியற் சிந்தனைகளை இரண்டாக வகைப்படுத்துவர். இச் சொற்கள் அவற்றின் ஆங்கில வடிவங்களை விடச் செம்மையான முறையில் அவை குறிக்கும் பொருளை வெளிப்படுத்திய போதும், அவற்றில் உள்ள 'முதல்' என்ற பதம் ஒவ்வொன்றும் எதைக் குறிக்கிறது என்பதைச் சரிவர விளங்குவதற்குச் சில வேளை தடையாகவும் அமையலாம்.

'முதல்' என்பது முதன்மைப் படுத்தலைக் குறிக்கிற அளவுக்கு முதலில் வந்தது என்பதைக் குறிக்காது. எனினும், எது முதலில் வந்தது என்ற வினாவைப் பொறுத்த வரை, பொருள்முதல்வாதிகள், பொருளை அடிப்படையாகக் கொண்டே சிந்தனைகள் அனைத்தும் உருவாயின என்பதில் உறுதியுடன் உள்ளனர். மாறாகக், "கருத்திலிருந்தே பொருள் தோன்றியது" என்றவாறான கொள்கை, எல்லா வகையான கருத்துமுதல்வாதிகட்கும் பொருந்தாது. இரண்டுவகைப்பட்ட உலக நோக்குக்களையும் வேறுபடுத்தப் பின்வரும் விளக்கங்கள் உதவலாம்:

கருத்துமுதல்வாதம் என்பது உணர்நிலை, எண்ணம், உளவியல், ஆன்மிகம் என்பனவற்றை முதன்மையானவையாயும் அடிப்படையானவையாயும் சடப்பொருள், இயற்கை, இயற்பியற் பண்புடையன என்பனவற்றை இரண்டாம் நிலையினவாயும் பெறப்பட்டனவாயும் நிபந்தனைக்கு உட்பட்டனவாயும் கொள்கிறது.

பொருள்முதல்வாதம் என்பது மனித அறிவும் உணர்நிலையும் பொருளை அடிப்படையாகக் கொண்டே எழுகின்றன எனக் கொள்கிறது. அதன்படி, பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் பொருள் சார்ந்தன என்பதால், பிரபஞ்சத்தின் நிகழ்வுகளை இயற்கைக்குப் புறம்பான எதுவும் ஆளுவதில்லை எனப் பொருள்முதல்வாதம் கொள்கிறது. எனவே, இயற்கை நிகழ்வுகளைச் சரிவர விளங்கிக் கொள்ள, இயற்கைக்குப் புறம்பான எதையும் ஒரு பொருள்முதல்வாதி; நாட இடமில்லை.


பொருள்களின் இருப்பையும் அவற்றைப் பற்றிய அறிவையுஞ் சார்ந்த மெய்யியற் பிரச்சனைகட்குத் தீர்வு தேடும் முறையில், கருத்துமுதல்வாதம், பொதுவாகப், பொருள்முதல்வாதத்தை மறுத்து நிற்கிறது. எனவே அறிவின் தோற்றுவாய், மனித இருப்பு, உலகினதும் உயிர்களினதும் தோற்றம் என்பன போன்ற பல விடயங்களில் கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும் அடிப்படையிலேயே முரண்படுகின்றன.

யதார்த்தம் என்பது எவ்வகையிலோ உள்ளத்தைச் சார்ந்தது எனவும் அதினின்று சுயாதீனமானதல்ல எனவும் கொள்ளும் மெய்யியல் எதையும் கருத்துமுதல்வாதம் எனக் கொள்ளலாம். குறுகிய நோக்குடைய கருத்துமுதல்வாதம், யதார்த்தத்தைப் பற்றிய நமது புரிதல், முதன்முக்கியமாக நமது உள்ளத்தின் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது எனவும் அதற்குப் புறம்பாகப் பொருட்களின் இயல்பு என்பது பொருளற்றது எனவும் வாதிடும். (இக் கொள்கையை அதன் அபத்தத்தின் எல்லைக்கே கொண்டுபோகலாம்: நமது உள்ளங்கட்கு வெளியே உலகு இல்லை என்று கூறும் 'மாயாவாதப்' போக்குக்களை நாம் அறிவோம்.)

இயற்பொருட்கள் அனைத்தையும் அனுபவங்களையும் உள்ளத்தின் அல்லது அதனினும் உயரிய ஒன்றின்; பெயராண்மைகளாகக் கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் கருத்துமுதல்வாதம் என்ற வகைக்குள் மெய்யியல் அடக்குகிறது. அதனால், முரண்பாடான பல வழிகளில் உலகை விளக்க முனையும் மதங்கள் யாவுமே கருத்துமுதல்வாதம் என்ற வகைக்குள் வருகின்றன. மனம் என்பதன் இயல்பென்ன, அது மனித உடலுக்கும் இயற்கைக்கும் புறம்பானதா எனுமாறான வினாக்கள் முதலான பல விடயங்களிலும் கருத்துமுதல்வாதிகள் தம்முள்ளே கடுமையாக முரண்படுகின்றனர் என்பதையும் இங்கு கூறிப்பிடல் தகும்.

(மிகுதி அடுத்த பக்கம்)

### இரங்கல்..



*கார்த்திகேசு சிவத்தம்பி*
*(மே 10, 1932 - சூலை 6, 2011)*

ஒரு முக்கிய தற்காலத் தமிழ் இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் மற்றும் சமூக சிந்தனையாளர் ஆவார்.

நூலகம் திட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள இவரது நூல்களை கீழ்க்காணும் இணைய முகவரியில் பெற்றுப்படிக்கலாம்.

***valai.thulaa.net/29***

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்துச் செல்லவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

**கருத்துமுதல்வாதமும் பொருள்முதல்வாதமும்**

**முன் பக்கத் தொடர்ச்சி..**

கார்ல் மாக்ஸ் மெய்யியலைப் பற்றிப் பேசுமிடத்துக் கூறிய வாக்கியம் ஒன்று இங்கு நினைவு கூரத்தக்கது: "இதுகாறும் மெய்யியலாளர்கள் உலகை விளக்க முயன்றுள்ளனர்@ முக்கியமானது ஏதெனின் உலகை மாற்றுவதாகும்". அதன் மூலம் மெய்யியலின் செயற்பாடு மனித இருப்பும் சிந்தனையும் பற்றிய முடிவற்ற விவாதங்களையெல்லாம் விட முக்கியமானது எனவும் அது மனிதரது சமூகச் செயற்பாட்டுக்கான ஒரு கருவியாக அமைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். தான் வாழ்ந்த காலத்து மெய்யியல் என்பது வெறும் தத்துவ விசாரங்களாக முடங்கிக் கிடந்தமையையும் அதை உலகை மாற்றுவதற்கான கருவியாக்கும் தேவையையுமே அவர் அவ்வாறு உணர்த்தினார்.

இன்றும் மெய்யியல் என்பது உலக நடப்பிற்கு அப்பாற்பட்ட 'உயரிய' சிந்தனைகளைப் பற்றியது எனும் எண்ணம் பல மரபுவழி மெய்யியலாளர்களிடம் உள்ளமையை நாம் அறிவோம். அவ்வாறான எண்ணம் வரட்டுத்தனமான ஒரு சிந்தனைப் போக்கின் விளைவென்றே தோன்றுகிறது. மெய்யியலின் மீது கருத்துமுதல்வாதத்தின் ஆதிக்கமும் உடல் உழைப்பிற்கும் மூளை உழைப்பிற்குமிடையே கற்பிக்கப்பட்டுள்ள ஏற்றத்தாழ்வான உறவும் அதற்குப் பங்களித்துள்ளன.

பொருள்முதல்வாதிகள் யாவரும் ஒத்த கருத்துடையோரல்ல. அவர்கள் தமது அணுகுமுறைகளிலம் உலக நோக்கிலும் வேறுபடலாம். மூர்க்கத்தனமான பொருள்முதல்வாதம், ஐம்புலன்கள் நேரடியாக உணராதவற்றை --மறைமுகமாகப் பெறக்கூடிய அறிவின் தேவையை-- மறுக்கிறது. தொடக்கக் காலம் பொருள்முதல்வாதப் போக்குக்கள் சிலவற்றின வீழ்ச்சிக்கு இவ்வாறான பலவீனமும் பங்களித்துள்ளது. பொருட்கள் தமது இயல்புகளில் எதிர்மறையான பண்புகளைப் பெறும் விதமாகவும் மாறலாம் என்ற உண்மையைப் பொருள்முதல்வாதிகள் நடைமுறை மூலமே கண்டறிந்தனர்.
விஞ்ஞானம், பொருள்முதல்வாத நோக்கை வேண்டி நிற்கிறது. எனினும் தாழ்நிலை அறிவிலிருந்தே அதுவும் விருத்தி பெற்றதாலும்; சமூகத்தில் மதத்தின் மேலாண்மையாலும் விஞ்ஞானமும் பல காலமாகக் கருத்துமுதல்வாதப் பாதிப்புக்கட்கு உட்பட்டுள்ளது.

பொருள்முதல்வாதம் என்பது,இயற்கையைபும் மனித மனத்தையும் அறிவதற்கு மட்டுமன்றிச், சமூகத்தை அறியவும் சமூக மாற்றத்தை இயலுமாக்கவும் பயன்பட வேண்டுமெனின், அது ஒவ்வொரு பொருளினதும் உள்ளார்ந்த முரண்பாடான இயல்பையும் அம் முரண்பாடுகளின் உறவாடலின் அடிப்படையிலேயே விருத்தியும் மாற்றமும் நிகழுகின்றன என்பதையும் ஏற்க வேண்டும். அந்த அணுகுமுறை இயங்கியற் கொள்கையின்பாற்பட்டதும் தனியாக ஆராயப்பட வேண்டியதுமாகும்.

## பைபிளின் அடிப்படையில் படைப்பு

*07-07-2011 அன்று நடைபெறவுள்ள கூட்டத்துக்கான விடயப்பரப்புக்கள்*

**-சிறீ மனோகரன்**

1ஆம் நாள் ஒளி
2ஆம் நாள் வானம் - கடல்
3ஆம் நாள் நிலம், கிரகங்கள்
4ஆம் நாள் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்
5ஆம் நாள் பறவைகள், மீன்கள்
6ஆம் நாள் மிருகங்கள், மனிதர்கள்
7ஆம் நாள் ஓய்வெடுத்துக் கொண்டார்

**யாத்திராகமம்** - 23

12 - நூறுநாள் வேலை செய்து ஏழாம் நாளிலே உன் கழுதையும், உன் அடிமைப் பெண்ணின் பிள்ளையும், அண்ணியனும் இளைப்பாற ஓய்ந்திருப்பாயாக!

**யாத்திராகமம்** - 31/32

15 - ஆறு நாளும் வேலை செய்யலாம். ஏழாம் நாளே வேலை ஒழிந்திருக்கும் ஓய்வு நாள், அது கர்த்தருக்கு பரிசுத்தமானது. ஓய்வு நாளில் வேலை செய்கின்றவன், எவனும் கொலை செய்யப்பட வேண்டும்.
மார்க் Twain என்ற அமெரிக்க எழுத்தாளன் கடவுள் களைத்திருந்திருந்த வேலையில் அதாவது ஆறாவது நாள் மனிதனை சிருஸ்டித்தார் என்று நக்கலாக கூறியிருந்தார்.

**அத்தியாயம்** 5

1. தேவன் மனிதனை சிருஸ்டித்த நாளிலே அவனை தேவ சாயலாக உண்டாக்கினார். மனுசன் கடவுளை தனது ரூபத்திலே உருவாக்கினான்.
2. அவர்களை ஆணும், பெண்ணுமாக சிருஸ்டித்து அவர்களை ஆசிர்வதித்து, அவர்களை சிருஸ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுசர் என பெயரிட்டார். கடவுள் ஆதமை மண்ணைக் கொணெ;டு உருவாக்கினார், ஏவாளை விலா எலும்பிலிருந்து உருவாக்கினார்.
3. ஆதாம் நூற்றிமுப்பது வயதான போது தன் சாயலாக தன் ரூபத்தின் வழியே ஒரு குமரலனை பெற்று அவனுக்கு சேத் என்று பெயரிட்டார்.
4. ஆதாம் சேத்தை பெற்ற பின் எண்ணூறு வருடம் உயிரோடு இருந்து குமாரனையும், குமாரத்திகளையும் பெற்றான்.

5. ஆதாம் உயிரோடு இருந்தது தொழாயிரத்து முப்பது வருடம்.

6. சேத் நூற்றியைந்து வயதான போது ஏனோசை பெற்றான்.

7. சேத் ஏனோசை பெற்றபின் எண்ணூற்றியேழு வருடம் உயிரோடு இருந்து குமாரனையும், குமாரத்திகளையும் பெற்றான்.

8. சேத்தினுடைய ஆயட்காலம் தொளாயிரத்து பன்னிரண்டு வருடங்கள்.

9. நோவா ஐந்நூறு வயதாக இருந்த போது சேம் காம் யாப்பேத் என்பவர்களைப் பெற்றான்.

**அத்தியாயம்** 6

மனிதனுடைய வாழ்நாள் நூற்றியிருவது வருடங்கள் ஆகும்.
கனியா மரங்கள் வெட்டுண்டு தீயிடப்படும் என பைபிள் கூறுகின்றது.

1650ல் ஜேம்ஸ் நிக்கலஸ் என்ற ஜரிஸ் நாட்டு பேராயர் கடவுளின் படைப்பு கி.மு 4004ல் இடம்பெற்றதாக குறிப்பிடுகின்றார்.

யூதர்கள் கடவுளின் படைப்பு கி.மு 3750ல் என்கின்றனர்.
விஞ்ஞானிகள் என்ன கூறுகின்றார்கள்.

**சாள்ஸ் டார்வின்**